உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்
நாள் :03.12.2024
அ.சா.4 – பாலமுருகன் S/o.பெரியைய்யா
S.C. No.583/2023 :

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் JCB ஓட்டுகிறேன். JCB ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா என்றால் இல்லை. பொதுவாக வேலையிருந்தால் காலை 8 மணிக்கும் செல்வேன் 9 மணிக்கும் செல்வேன், சில சமயம் வேலை இருக்காது. நான் ஓட்டும் JCB யின் உரிமையாளர் கீழையூரை சேர்ந்தவர். காலை கீழையூருக்கு சென்று வண்டி எடுத்துக்கொண்டு வேலைக்கு சென்று விட்டு மீண்டும் வண்டியை கொண்டுபோய் விட்டுவிட்டு வருவேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று நான் வேலைக்கு செல்லவில்லை. இந்த வழக்கின் புகார்தாரரான அ.சா.1 நதியாவும் நானும் பள்ளி நண்பர்கள் என்றால் சரியல்ல. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரிகளின் வீட்டிற்கு அருகில் எனக்கு வீடு இருக்கிறதா என்றால் அருகில் இல்லை 50 அடி துாரத்தில் இருக்கிறது. அதில் தான் நான் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. எனக்கு குழந்தைகள் இல்லை. சம்பவம் நடந்த அன்று வீட்டில் நானும் எனது மனைவியும் இருந்தோம் என்றால் சரிதான். பகல் 12.00 மணியளவில் நானும், என் வீட்டில் உள்ளவர்களும், வீட்டில் பேசிக்கொண்டிருந்தோம், அலறல் சத்தம் கேட்கவே வெளியில் ஓடிவந்துபார்த்தோம். அலறல் சத்தத்திற்கு முன்பு என்ன நடந்தது என்பது தெரியுமா என்றால் தெரியாது. அலறல் சத்தம் கேட்ட பிறகு சம்பவ இடத்திற்கு நான் சென்று பார்த்தேன். நான் 108 ஆம்புலன்சிற்கு தகவல் தொடர்பு கொண்டேனா என்றால் இல்லை, அருகில் இருப்பவர்கள் தகவல் சொன்னார்கள். யார் தகவல் ஆம்புலன்சிற்கு சொன்னார்கள் என்று நினைவில்லை. பிரச்சினை

முடிந்து நதியாவை ஆம்புலன்சில் ஏற்றிவிட்ட பிறகு நான் வீட்டிற்கு சென்றேன். என்னை கீழவளவு காவல்நிலையத்தார் சம்பவ இடத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். நதியாவை ஆம்புலன்சில் ஏற்றி சென்ற பிறகு காவலர்கள் என்னை விசாரித்தார்கள். என்னை அரை மணி நேரத்தில் விசாரணை செய்தார்கள். என்னை பெயர் எல்லாம் கேட்டுவிட்டு என்ன நடந்தது என்று விசாரித்தார்கள் சுமார் கால் மணி நேரம் அளவு என்னை காவலர்கள் விசாரணை செய்தார்கள். மற்ற நபர்களையும் விசாரணை செய்தார்கள் மற்றநபர்களை எவ்வளவு நேரம் விசாரணை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் குறிப்பிட்ட விபரங்களை தான் காவல்துறையினரிடம் அன்று விசாரணையில் சொன்னேன். நான் JCB ஓட்டுநர் என்பதால் 50 மீ தொலைவு என்பது எவ்வளவு தூரம் என்பது தெரியும் என்றால் சரிதான். 50 மீ என்பது சுமார் 200 அடிக்குள்ளாக இருக்கும். 200 அடி தள்ளி இருக்கும் போது என்ன நடந்தது என்பது குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சத்தம் கேட்டு பார்த்தேன். என்ன நடந்தது என்பதை பார்க்க இயலாது என்றாலும் சத்தம் கேட்கலாம். என்னை விசாரணை செய்யும் போது மதியம் 12.15 மணியில் இருந்து மதியம் 1.00 மணி இருக்கும். என்னை முதல் விசாரணையிலும் சரி, தற்போதும் சரி அ.சா.1 நதியா தான் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. காவலர்கள் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நீதிமன்றத்திற்கு வரச்சொன்னார்கள். சம்பவம் நடந்த போது நான் ஊரிலே இல்லை என்றும், நான் வேலைக்கு சென்று விட்டேன் என்றும் நான் சம்பவத்தை கேள்விப்படவும் இல்லை, பார்க்கவுமில்லை என்றும், நதியா எங்கள் ஊர் காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நதியாவிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே நில பஞ்சாயத்து நடந்த விவகாரத்தில் நான் ஏதேனும் பஞ்சாயத்து செய்தேனா என்றால் இல்லை. என்ன

இடப்பிரச்சினை என்று தெரியுமா என்றால் இடப்பிரச்சினை என்று தெரியும் என்ன பிரச்சினை என்று தெரியாது. சாட்சியிடம் மாதிரி வரைபடம் காட்டப்பட்டு, அதில் தன்னுடைய வீடு அருகில் இருப்பதாக காட்டப்படவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2024.12.03 19:07:13 +0530

Assistant Sessions Judge
Melur